# பெற்றோருக்கான சிறப்புக் கல்வி பற்றிய அறிமுகம்

TEA
Texas Education Agency

## சிறப்புக் கல்வி என்றால் என்ன?

ஒரு குழந்தை சிறப்புக் கல்வி பெறுகிறது என்பதன் அர்த்தம், ஒரு பொதுப் பள்ளி அந்த மாணவரின் தேவைகளுக்கு ஏற்ப தனிப்பயனாக்கப்பட்ட சேவைகளையும் கற்பித்தலையும் வழங்குகிறது என்பதாகும். இயலாதோருக்கான கல்விச் சட்டம் (IDEA) எனப்படும் ஒரு கூட்டாட்சிச் சட்டத்தின் காரணமாக சிறப்புக் கல்வி கிடைக்கிறது, இது இயலாத மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் இந்தத் தனிப்பட்ட கற்றல் வாய்ப்புகளைப் பெறுவதற்கான சிறப்பு சட்ட உரிமைகளை வழங்குகிறது.

**சிறப்புக் கல்வி என்பது ஒரு சேவை, அது ஓர் இடம் அல்ல.**

### சிறப்புக் கல்விச் சேவைகள் உங்கள் குழந்தைக்கு எவ்வாறு உதவ முடியும்?



- உங்கள் குழந்தை சிறப்புக் கல்விச் சேவைகளுக்கு தகுதியுடையவராக இருந்தால், உங்கள் குழந்தையின் தனித்துவமான தேவைகளைப் பூர்த்தி செய்ய சிறப்பாக வடிவமைக்கப்பட்ட சேவைகளுக்கும் ஆதரவுகளுக்கும் அணுகல் உங்கள் குழந்தை பெறுவார்.
- சிறப்புக் கல்விச் சேவைகள் உங்களுக்கு எந்தச் செலவும் இன்றி தனிநபருக்காக வடிவமைக்கப்பட்ட திட்டங்களை வழங்குகின்றன. இதில் சிறப்புக் கல்வி ஆசிரியர்கள் மற்றும் தொழில்சார் சிகிச்சையாளர்கள், உடலியல் சிகிச்சையாளர்கள், பேச்சு-மொழி நோயியல் வல்லுநர்கள் மற்றும் (கற்றல் குறைபாடு) டிஸ்லெக்ஸியா பயிற்சி வழங்குபவர்கள் போன்ற சேவை வழங்குநர்களும் உள்ளடக்கப்படலாம்.

## சிறப்புக் கல்விச் செயல்முறை:

பெற்றோருக்கு எந்த நேரத்திலும் சிறப்புக் கல்வி மதிப்பீட்டைக் கோருவதற்கான உரிமை உண்டு. சிறப்புக் கல்விச் சேவைகள் தேவைப்படக்கூடிய ஒரு குறைபாடு ஒரு மாணவரிடம் இருப்பதாகச் சந்தேகிக்கப்படும்போது, பள்ளிகள், அவரை மதிப்பீட்டிற்காகப் பரிந்துரைக்க வேண்டும். **சிறப்புக் கல்விச் செயல்முறையின்** படிகளைப் புரிந்துகொள்வது முக்கியமானது.

### சிறப்புக் கல்வியைத் தொடங்குவதற்கான படிகள்:

1. பரிந்துரை
2. மதிப்பீடு செய்ய ஒப்புதல் வழங்குதல்
3. மதிப்பீடு
4. தகுதியை நிர்ணயித்தல் (ARD)
5. IEP-ஐ உருவாக்குதல்

### சிறப்புக் கல்விச் சேவைகளைப்

→ IEP-ஐ செயல்படுத்த

spedtex.org
**1-855-773-3839**

SPEDTEX
Special Education Information Center

**பெற்றோருக்கான சிறப்புக் கல்வி உதவி**

**ARD செயல்முறைக்கான பெற்றோர் வழிகாட்டி**

**செயல்முறைசார்**
bit.ly/ParentsNPS

1973 ஆம் ஆண்டின் புனர்வாழ்வுச் சட்டத்தின் பிரிவு 504 போன்ற, இயலாமையுடைய மாணவர்களுக்குக் குறிப்பிட்ட பாதுகாப்புகளை வழங்கும் பிற கூட்டாட்சிச் சட்டங்கள் இருந்தாலும், இயலாதோர் கல்விச் சட்டத்தில் (IDEA) அந்தச் சட்டத்தின் கீழ் மட்டுமே கிடைக்கக்கூடிய குறிப்பிட்ட உரிமைகள் உள்ளன. இந்த ஆவணம் அந்த உரிமைகளைச் சுருக்கமாகக் கூறுகிறது.

## 1 **பரிந்துரை** சிறப்புக் கல்வி மதிப்பீட்டிற்காகப் பரிந்துரை செய்யப்படுகிறது.



**ஒரு பரிந்துரை:**

- உங்கள் பிள்ளை வெற்றிபெற சிறப்புக் கல்வி சேவைகள் தேவைப்படும் ஒரு குறைபாடு இருக்கலாம் என்று ஒரு பொதுப் பள்ளி கருதும் போது சட்டப்படி தேவைப்படுகிறது.
- ஒரு பெற்றோர் சிறப்புக் கல்வி மதிப்பீட்டைச் செய்யுமாறு கோரினால், அது *கோரிக்கை* என்று அழைக்கப்படுகிறது. உரிய பணியாளரிடம் எழுத்துப்பூர்வமாக கோரிக்கை முன்வைக்கப்பட வேண்டும். பள்ளி ஒரு மதிப்பீட்டைத் தொடருமா இல்லையா என்பது குறித்த தகவல்களுடன் பள்ளி பதிலளிக்கும்.

அதற்குப் பள்ளி 15 பள்ளி நாட்களுக்குள் எழுத்துப்பூர்வமாகப் பதிலளிக்க வேண்டும்.

## 2 உங்கள் குழந்தையை பள்ளி மதிப்பீடு செய்வதற்கு நீங்கள் **ஒப்புதல் வழங்குகிறீர்களா** என்று உங்களிடம் கேட்கப்படும்.



**மதிப்பீடு செய்வதற்கான ஒப்புதல்:**

- சிறப்புப் பயிற்சி பெற்ற பணியாளர்கள் உங்கள் குழந்தையை குறிப்பிட்ட பகுதிகளில் மதிப்பீடு செய்வதற்கும், ஆய்வு செய்வதற்கும் நீங்கள் வழங்கத் தேர்ந்தெடுக்கும் அனுமதி.
- உங்கள் குழந்தையின் மதிப்பீட்டைப் பள்ளி முடிக்க வேண்டிய காலக்கெடுவைத் தொடங்கப் பள்ளியால் பயன்படுத்தப்படுகிறது.

சில விதிவிலக்குகளுடன், 45 பள்ளி நாட்களுக்குள் ஒரு மதிப்பீடு முடிக்கப்பட வேண்டும்.

## 3 **மதிப்பீடு** பயிற்சி ஒரு பெற்ற தொழில் வல்லுநர் குழுவால் செய்யப்படும்.



**ஒரு மதிப்பீடு என்பது:**

- முழுமையான *தனிநபர் மற்றும் ஆரம்ப மதிப்பீடு* (FIIE) என்று அழைக்கப்படுகிறது, இதில் கல்விப் பரிந்துரைகள் மற்றும் உங்கள் பிள்ளையின் பலம், ஆர்வங்கள் மற்றும் சவால்கள் பற்றிய தகவல்களின் எழுத்துப்பூர்வ அறிக்கை அடங்கும். இயலாமை தொடர்பான பயிற்சி பெற்ற தொழில்முறை நிபுணர்கள் பங்கேற்க வேண்டும். உதாரணமாக, கற்றல் குறைபாடு (Dyslexia) சந்தேகிக்கப்பட்டால் உரிமம் பெற்ற டிஸ்லெக்ஸியா தெரபிஸ்ட் ஒருவர் பங்கேற்க வேண்டும்.
- இந்தச் சேவை உங்களுக்கு எந்தச் செலவும் இல்லாமல் வழங்கப்படும். நீங்கள் பள்ளியின் மதிப்பீட்டுடன் ஒப்புக்கொள்ளாவிட்டால், நீங்கள் *சுயாதீன கல்வி மதிப்பீடு* (IEE) ஒன்றைக் கோரலாம். இது பள்ளியில் பணியாற்றாத ஒருவரால் மேற்கொள்ளப்படும்.

## 4 உங்கள் பிள்ளை சிறப்புக் கல்வி சேவைகளுக்கு தகுதியானவரா என்பதை தீர்மானிக்க **அனுமதி, மீளாய்வு மற்றும் நீக்கம் (ARD) குழு** கலந்துரையாடும்.

**ARD குழு என்பது:**

- இது நீங்கள் உட்பட, ஆசிரியர்கள், பள்ளி நிர்வாகிகள், உங்கள் பிள்ளை குறித்து சிறப்பு அறிவுள்ளவர்கள் மற்றும் சந்தேகிக்கப்படும் குறைபாடு தொடர்பாக பயிற்சி பெற்ற நிபுணர்கள் அடங்கிய ஒரு குழுவாகும்.
- இந்தக் கூட்டத்தில், உங்கள் பிள்ளையின் மதிப்பீட்டு அறிக்கை கலந்துரையாடப்படும். குழந்தையின் பலவீனங்கள் மற்றும் தேவைகள் அடையாளம் காணப்படுவதுடன், பின்னர் குழந்தைக்கு இயலாமை உள்ளதா மற்றும் சிறப்புக் கல்வி சேவைகள் தேவையா என்பது தீர்மானிக்கப்படும்.



மதிப்பீடு முடிந்தவுடன், ஒரு ARD குழுவுக்கு தகுதியைத் தீர்மானிக்கவும் IEP-ஐ உருவாக்கவும் பொதுவாக 30 பஞ்சாங்க நாட்களுக்கு கால அவகாசம் வழங்கப்படும். பள்ளியானது மதிப்பீட்டு அறிக்கையை கூடிய விரைவில், ஆனால் ARD குழுக் கூட்டத்திற்கு ஐந்து பள்ளி நாட்களுக்கு முன்னதாக வழங்க வேண்டும்.

5

## உங்கள் பிள்ளை சிறப்புக் கல்விச் சேவைகளுக்கு தகுதியானவர் என நிரூபிக்கப்பட்டால், ARD குழு **தனிப்பட்ட கல்வித் திட்டம் (IEP)** ஒன்றையும் உருவாக்கும்.



**ஒரு தனிப்பட்ட கல்வித் திட்டம் (IEP) என்பது:**

- உங்கள் பிள்ளையின் இயலாமை தற்போதைய திறன்கள் மற்றும் தேவைகள், இலக்குகள் மற்றும் தேவையான சிறப்புக் கல்வி சேவைகள் ஆகியவற்றை அடையாளம் காணும் தகவல் தொகுப்பாகும்.
- ஒருமுறை தயாரிக்கப்பட்டு, நீங்கள் ஒப்புதல் அளித்த பின் பள்ளி அதை கட்டாயமாக செயல்படுத்த வேண்டிய ஒரு ஆவணமாகும்.. சேவைகள் முடியுமான விரைவில் தொடங்கப்படும்..

**IEP உருவாக்கத்தில் பங்கேற்கிம் உரிமையும், சிறப்புக் கல்விச் சேவைகளை ஒப்புக்கொள்ள அல்லது மறுக்கும் உரிமையும் உங்களுக்கு உள்ளது.**

## தொடர்ந்து முன்னோக்கிச் செல்லுதல்: சிறப்புக் கல்வி சேவைகள் பெறுதல்

ஒரு IEP உருவாக்கப்பட்ட பின், அந்த IEP-ஐச் செயல்படுத்துவது பள்ளியின் பொறுப்பாகும். IEP-இல் குறிப்பிடப்பட்ட சேவைகள், வசதிகள் மற்றும் ஆதரவுகளை பள்ளி வழங்க வேண்டிய அதேவேளை பள்ளியின் பணியாளர்கள் IEP-இல் உள்ள இலக்குகளை நோக்கிய உங்கள் பிள்ளையின் முன்னேற்றத்தை கண்காணிப்பார்கள்.



- ஒவ்வொரு தரப்படுத்தல் காலப்பகுதியிலும் குறைந்தது ஒருமுறையாவது உங்கள் பிள்ளையின் IEP இலக்குகளுக்கான முன்னேற்ற அறிக்கைகள் உங்களுக்கு வழங்கப்படும்.
- ARD குழு குறைந்தது ஆண்டுக்கு ஒருமுறை உங்கள் பிள்ளையின் IEP-ஐ மீளாய்வு செய்யும்.
- மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடு தேவையா என்பதை ARD குழுவில் நீங்கள் கலந்துரையாடுவீர்கள்.
- நீங்கள் எப்போது வேண்டுமானாலும் ARD கூட்டத்தை கோரலாம்.
- நீங்கள் சிறப்புக் கல்வி சேவைகளுக்கான உங்கள் அனுமதியை ரத்து செய்யலாம். அதாவது, உங்கள் குழந்தைக்கு வழங்கப்படும் சிறப்புக் கல்வி சேவைகளை நிறுத்த வேண்டும் என்று பள்ளிக்கு எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கலாம்.
- பள்ளி ஒழுக்க நடவடிக்கைகளுக்கான சிறப்பு விதிகள் உள்ளன. மாணவரின் தவறான நடத்தை அவரது இயலாமையுடன் தொடர்புடையது என கண்டறியப்பட்டால், சில சூழ்நிலைகளில் ARD குழு ஒழுக்க நடவடிக்கையை மாற்றக்கூடும்.

## முரண்பாடு ஏற்பட்டால் :

ஒவ்வொரு ARD கூட்டத்திலும் நீங்கள் செயற்திறமாக பங்கேற்பவராக இருப்பீர்கள்.அடுத்தகட்ட நடவடிக்கைக்கான சிறந்த வழி குறித்து ஒருமித்த கருத்தை எட்டுவதற்காகப் பள்ளி ஊழியர்களுடன் உங்கள் குழந்தையின் குறிப்பிட்ட தேவைகளைப் பற்றிக் கலந்துரையாடுவீர்கள். ஆனால் சில சமயங்களில் பள்ளி தீர்மானங்களுடன் கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம். IDEA கூட்டாட்சிச் சட்டத்தின் கீழ், சிறப்புக் கல்வியைத் தொடங்குவதற்கான *படிகளிலும்* மற்றும் சிறப்புக் கல்வி சேவைகளைப் *பெறும்போதும்* பள்ளியால் எடுக்கப்படும் சிறப்புக் கல்வி முடிவுகளுடன் உடன்படாமல் இருப்பதற்கு உங்களுக்கு முறையான உரிமைகள் உள்ளன. பிணக்குத் தீர்வு விருப்பங்களில், மாநில அளவில் புகார்களைப் பதிவு செய்தல், மத்தியஸ்தம் கோருதல் மற்றும் முறையான விசாரணைக்குக் கோருதல் ஆகியவை அடங்கும். ARD குழுக்கள் IEPகள் தொடர்பில் ஒருமித்த கருத்தை எட்டுவதற்கு மாநில ஒருங்கிணைப்பாளர்கள் உதவுவர்.

## ஒரு IEP இல் என்ன உள்ளது?:

**IEP உங்கள் குழந்தைக்காக குறிப்பிட்ட சில கூறுகளை உள்ளடக்க வேண்டும், அவற்றில்:**



**PLAAFP**

» *தற்போதைய கல்வி அடைவு மற்றும் செயல்பாட்டு செயல்திறன் நிலைகள் (PLAAFP):* (**PLAAFP**): ARD குழு, மதிப்பீட்டு அறிக்கை மற்றும் பிற தரவுகளின் அடிப்படையில் உங்கள் குழந்தையின் திறன்கள், திறமைகள் மற்றும் சவால்களை பதிவு செய்கிறது.

**இலக்குகள்**

» அளவிடக்கூடிய ஆண்டு (Measurable Annual Goals)**இலக்குகள்**: இலக்குகள் உங்கள் குழந்தையின் குறிப்பிட்ட தேவைகளில் கவனம் செலுத்தும் வகையிலும் உங்கள் குழந்தை எந்த நேரத்தில் முன்னேற்றம் அடைவார் என்பதை விளக்கக்கூடிய வகையிலும் உருவாக்கப்படுகின்றன.

- உதாரணமாக, உங்கள் பிள்ளைக்கு டிஸ்லெக்ஸியா இருந்தால், ஒரு இலக்கு வாசிப்பு வளர்ச்சி அல்லது சரளமாக வாசிப்பதைக் குறிப்பிட்ட காலத்திற்குள் மேம்படுத்துவதில் கவனம் செலுத்தலாம்.

**கற்பித்தல் மற்றும் சேவைகள்**

» வழங்கப்படும் **சிறப்பாக வடிவமைக்கப்பட்ட அறிவுறுத்தல், தொடர்புடைய சேவைகள், துணை உதவி மற்றும் சேவைகள்** பற்றிய விவரம். இந்தக் கற்பித்தல் மற்றும் சேவைகள் உங்கள் குழந்தையின் குறிப்பிட்ட தேவைகளின் அடிப்படையில் மாறுபடும். உதாரணமாக, உங்கள் குழந்தைக்கு கற்றல் குறைபாடு இருப்பதாக கண்டறியப்பட்டால்::

- சிறப்பு கற்பித்தலில், கற்றல் குறைபாடுள்ள மாணவர்களுக்கு உதவுவதற்காக நிரூபிக்கப்பட்ட ஒரு திட்டத்தைப் பயன்படுத்தி, மிகவும் பயிற்சி பெற்ற நிபுணர் வழியாக வழக்கமான அட்டவணையில் கற்பித்தல் இடம்பெறும். இது டிஸ்லெக்ஸியா கையேடு (Dyslexia Handbook) உடன் இணங்க செயல்படுத்தப்படும்;
- தொடர்புடைய சேவைகள் (Related Services) என்பது, உங்கள் குழந்தைக்கு எழுதுவதில் சிரமம் இருந்தால், கைநுணுக்கத் திறனை மேம்படுத்த தொழில் சிகிச்சையாளர் (Occupational Therapist) உதவியை வழங்கலாம்; அத்துடன்
- மேலதிக உதவிகள் மற்றும் சேவைகள் (Supplementary Aids and Services) என்பது, எழுதும் பணிகளுக்கு speech-to-text (உரை மாற்று) வசதிகளை வழங்குவது போன்றவை ஆகும்.

**மதிப்பீடுகள்**

» கூடுதல் நேரம் போன்ற சிறப்பு ஏற்பாடுகள் அவசியமா என்பது உட்பட மாநில மற்றும் மாவட்ட அளவிலான **மதிப்பீடுகளில்** உங்கள் குழந்தை எவ்வாறு பங்கேற்கும் என்பது பற்றிய தகவல்கள்.

**நிலைமாற்றம்**

» **நிலைமாற்றச்** சேவைகள்: உங்கள் குழந்தை 14 வயதை அடையும் போது, பள்ளிக்குப் பிந்தைய வாழ்க்கைக்கான திட்டங்கள் IEP-இல் பதிவு செய்யப்பட வேண்டும். மேலும், அந்த இலக்குகளுக்கு ஏற்ப சிறப்புக் கல்வி சேவைகள் எவ்வாறு மாற்றப்பட வேண்டும் என்பதும் அடங்கும்.

**இட ஒதுக்கீடு**

» IEP (தனிப்பட்ட கல்வித் திட்டம்) உங்கள் குழந்தையின் கல்வி **இட ஒதுக்கீட்டைப்** பதிவு செய்கிறது. இடமளிப்பு தொடர்பான முடிவுகள், குழந்தைக்கு குறைந்த கட்டுப்பாடுகள் கொண்ட சூழலில் கல்வி (Least Restrictive Environment - LRE) வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படையில் எடுக்கப்படுகின்றன. LRE-இன் நோக்கம், உங்கள் குழந்தையின் தனிப்பட்ட தேவைகளை கருத்தில் கொண்டு, இயன்ற அளவு இயலாத குழந்தைகளுடன் ஒரே வகுப்பறை மற்றும் கல்விச் சூழலில் அவரை இணைத்து கல்வி வழங்குவதாகும்.

இந்தப் படிவம், பரிந்துரை (referral) செய்யப்பட்ட பின் பெற்றோருக்கு வழங்கப்பட வேண்டிய உரிமைகளின் சுருக்கமாகும். இந்தப் படிவத்தில் உங்கள் கையொப்பம் இடப்படுவது, நீங்கள் இந்தப் படிவத்தைப் பெற்றுக்கொண்டீர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக மட்டுமே ஆகும். உங்கள் உரிமைகள் பற்றிய மேலதிக தகவல்களுக்கு: செயல்முறைசார் பாதுகாப்பு அறிவிப்பு மற்றும் ARD செயல்முறை குறித்த பெற்றோர் வழிகாட்டி ஆகிய ஆவணங்களைப் பார்வையிடவும்.

| மாணவர் பெயர்: | மாணவர் அடையாள அட்டை இலக்கம்: |
| --- | --- |
| | |

பெற்றார் பெயர்

பெற்றார் கையொப்பம்

திகதி